# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 163 · புதன்கிழமை Wednesday · 09.09.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# தமிழக அமைச்சரவை விரைவில் மாற்றம்

## கூட்டணி கட்சிக்கும் இலாகா மாறுகிறது



தமிழக அமைச்சரவை விரைவில் மாற்றம் செய்யப்பட உள்ளது. கூட்டணி கட்சிக்கும் இலாகா மாற்றம் செய்யப்பட உள்ளது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 23-ந் தேதி, 17-வது சட்டசபை தேர்தல் நடைபெற்றது. வாக்குகள் மே4-ந்தேதி எண்ணப்பட்ட நிலையில், யாரும் எதிர்பாராத வகையில், தேர்தலை முதல் முறையாக சந்தித்த த.வெ.க. வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைத்தது.

முதல் - அமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் 35 பேர் இடம் பெற்றிருந்தனர். இதில், கூட்டணி கட்சிகளான காங்கிரசுக்கு 2 இடமும், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு தலா ஒரு இடமும் வழங்கப்பட்டது.

முதல்-அமைச்சரிடம் அறிக்கை அளிப்பு

தமிழகத்தில் த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்று 4 மாதங்கள் ஆகும் நிலையில், ஒவ்வொரு அமைச்சரும் தங்கள் துறையில் செயல்பட்ட விதம், துறை சார்ந்த அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனை கூட்டங்கள், சொந்த தொகுதியில் மேற்கொண்ட பணிகள், சட்டசபை செயல்பாடு, த.வெ.க.வினரிடம் நடந்து கொண்ட விதம் உள்ளிட்டவைகளை ஆய்வு செய்து முதல்- அமைச்சர் விஜய்யின் ஆலோசகர்களான ஜான் ஆரோக்கியசாமி, விஷ்ணு ரெட்டி ஆகியோர் அறிக்கை அளித்துள்ளனர்.

அந்த அறிக்கையில், சில அமைச்சர்களின் செயல்பாடுகள் திருப்தி அளிக்கவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை துறை செயலாளர்களை அழைத்து முதல்-அமைச்சர் ஜோசப் விஜய்யும் உறுதி செய்துகொண்டுள்ளார்.

இந்த நிலையில், சுமார் 1 மாதம் நடைபெற்ற தமிழக சட்டசபை கூட்டம் இன்று (செவ்வாய்கிழமை) முடிவடையும் நிலையில், அமைச்சரவை மாற்றியமைக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்த வகையில், த.வெ.க.வில் ஒரு பெண் அமைச்சர் உள்பட 3 பேர் மாற்றப்பட இருப்பதாக தெரிகிறது.

இதேபோல், கூட்டணி கட்சியை சேர்ந்த 4 அமைச்சர்களில் ஒருவருக்கு இலாகா மாற்றப்பட உள்ளதாகவும் கூறப்படுகிறது. மேலும், த.வெ.க. அமைச்சர்களில் ஒருவர், தனக்கு பெரிய துறை வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதால், அவருக்கும் இலாகா மாற்றப்படும் என்று தெரிகிறது. அமைச்சரவை மாற்றப்பட உள்ளதால், பல அமைச்சர்கள் கலக்கத்தில் இருக்கிறார்களாம்.

# சட்டப்பேரவை மாண்புகள் கேள்விக்குறியாகியுள்ளது

## தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: சட்டப்பேரவையின் மாண்புகள் கேள்விக்குறியாகியுள்ளது என திமுக தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரானது கடந்த ஆகஸ்ட் 5-ஆம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. கூட்டத்தொடரானது இன்றுடன் நிறைவடையவுள்ளது. இந்நிலையில், நேற்று நடைபெற்ற சட்டப்பேரவை கூட்டத்தொடரின்போது, முதலமைச்சர் விஜய் பதிலுரை அளித்தார். அதற்கு திமுகவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

தொடர்ந்து, இன்றைய கூட்டத்தொடரின்போதும் திமுக சட்டமன்ற உறுப்பினர் தொடர் அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவர்கள் அவைக்காவலர்கள் மூலம் சட்டப்பேரவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களுடன், திமுக தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டா லின், அண்ணா அறிவாலயத்தில் சட்டப்பேரவையில் நடந்த நிகழ்வு குறித்து கலந்தாலோசனை செய்தார்.

இந்த கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மு.க.ஸ்டாலின், "சட்டப்பேரவை மாண்போடு நடக்கிறதா? என்று நீங்கள் கேட்கும் கேள்வியிலேயே சட்டப்பேரவை மாண்போடு நடக்கிறதா, இல்லையா என்பது தெரிகிறது" என்று கூறினார்.

தொடர்ந்து, இரண்டு தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்த கேள்விக்கு எந்த ஒரு பதிலும் அளிக்காமல் ஸ்டாலின் புறப்பட்டார்.

அதன் பின்னர் திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் செய்தியாளர்களிடம் கூறியபோது, "திமுக உறுப்பினர்களை சட்டப்பேரவையில் இருந்து வெளியேற்றி இருக்கிறார்கள். இதன் மூலம், சட்டப்பேரவை மாண்போடு நடக்கவில்லை என்பதை நாங்கள் சொல்வதை விட தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் வெளுத்து வாங்கியிருக்கிறார்கள்.

முதலமைச்சர் விஜய் பேசியது அநாகரீகமானது என்பதை அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேல் நாங்கள் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

திமுக மீது ஊழல் குற்றச்சாட்டுகளை வைத்திருக்கிறார் முதலமைச்சர் விஜய். 1975 சர்க்காரியா கமிஷனின் விளக்கத்தையும், அமலாக்கத்துறை வழக்கின் குற்றச்சாட்டுகளையும் ஆதாரமாக சொல்கிறார் முதலமைச்சர் விஜய்.

இது ஏற்புடையதாக இருக்கிறதா என்றால், ஒரு விஷயம் நான் சொல்ல வேண்டும். இப்போது எப்படி வழக்கு போடுகிறார்களோ இதுபோல் அந்த காலத்தில் வழக்கு போட்டார்கள். நாங்கள் நீதிமன்றம் சென்றோம். நீதிமன்றத்தில் நாங்கள் நிரபராதிகள் என்று தெரியவந்தது. அதன் பின்னர் அந்த வழக்குகளை பற்றி பேசுவதே முட்டாள்தனம்" என்று கூறினார்.

# த.வெ.க., தி.மு.க. பிரச்சனையில் பேரவை நேரம் வீணடிப்பு

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



சென்னை: "ஆளுங்கட்சி - எதிர்க்கட்சி பிரச்சினையில் சட்டப்பேரவை நேரம் வீணடிக்கப்படுகிறது" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை வளாகத்தில் அதிமுக பொதுச் செயலாளார் எடப்பாடி பழனிசாமி இன்று செய்தியாளர்களை சந்தித்தபோது கூறியது: "தமிழக சட்டப்பேரவையில் தினந்தோறும் ஏதேனும் பிரச்சினை ஏற்படுகிறது. நிதிநிலை அறிக்கை, விவாதத்திலும் பிரச்சினை. மானியக்கோரிக்கையிலும் பிரச்சினை. அதனால் மக்கள் பிரச்சினைகளை அவையில் முழுமையாகப் பேச முடியவில்லை.

இன்றைக்கும், சட்டப்பேரவையில் கேள்வி நேரம் ஆரம்பித்ததும் திமுகவினர் பேச முற்படும்போது பிரச்சினை ஏற்பட்டது. வழக்கமாகவே திமுகவினர் பேசும்போது அமைச்சர்களோ, ஆளும் கட்சி எம்எல்ஏக்களோ ஏதாவது ஒரு பிரச்சினையை, குற்றச்சாட்டை எதிர்க்கட்சி மீது சுமத்துகிறார்கள்.

பிறகு எதிர்க்கட்சித் தரப்பில் பதில், அதற்கு ஆளுங்கட்சியினர் விளக்கம், மீண்டும் எதிர்க்கட்சி பதில் என்று மாறி மாறி இருதரப்பினரும் பதில் சொல்லி அவை நேரம் வீணடிக்கப்படுகிறது. இன்றைக்கும் சுமார் 1 மணி நேரம் வீணானது.

பின்னர் சபாநாயகர் இருதரப்பையும் சமாதானப்படுத்தி அவை நடந்தாலும், மீண்டும் ஆளும் கட்சியினர் திமுக ஆட்சி மீது குற்றம் சாட்டுகின்றனர். இதில், தவெக ஆட்சியில் 10 மணி நேரம் சட்டப்பேரவை நடைபெறுகிறது என்று பெருமையாகச் சொல்கிறார்கள். ஆனால் 3 மணி நேரம் தான் அவை நடைபெறுகிறது. மீதி 7 மணி நேரம் ஆளும், எதிர்க்கட்சியின் பிரச்சினையால் சட்டப்பேரவை நேரம் வீணடிக்கப்படுகிறது.

மற்ற உறுப்பினர்களால் கேள்வி கேட்கவே முடியவில்லை. கேள்வி கேட்டாலும் பதில் இல்லை. அதேபோல் எல்லா கேள்விகளுக்கும் பெரும்பாலும் 3 அமைச்சர்கள் தான் பதில் சொல்கிறார்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அந்தந்த துறை சார்ந்த அமைச்சர்கள் பதில் சொல்வதே தீர்வுக்கான வழி. இதுதான் கடந்தகால வரலாறு. ஆனால் தவெக ஆட்சியில் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கேள்விக்கு உரிய அமைச்சர்களின் பதில் இல்லை.

உதாரணத்துக்கு, தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்பு துறை மானிய கோரிக்கை மீதான விவாதம் வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் அதிமுக சார்பில் நான் கலந்து கொண்டு எனது கருத்துகளை பதிவு செய்தேன். ஆனால், என் கேள்விகளுக்கு முதல்வரிடம் இருந்து பதிலில்லை.

முதல்வர் பதிலுரையில் மேலோட்டமாகப் பேசுகிறார். ஒரே ஒரு பதில் காவல் துறை காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதே வந்தது. அதுவும்கூட எப்போது என்ற தகவல் இல்லை.

அதேபோல் இணையவழிக் குற்றங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. FQL ஆன்லைன் மோசடி மூலம் மதுரை, சிவகங்கை உள்ளிட்ட மாவட்டங்களில் மக்கள் பணத்தை இழந்துள்ளனர். ரூ.1,000 கோடி அளவில் ஏழை மக்கள் பணம் நவீன முறையில் மோசடி செய்யப்பட்டுள்ளது. அது மிக முக்கியமான பிரச்சினை. அதற்கும் பதில் இல்லை.

சாலை விபத்துகளை தடுக்கும் நடவடிக்கைகள் பற்றி எதுவுமே சொல்லவில்லை. நீண்ட நாட்களாக பணியில் உள்ள காவலர்களின் பதவி உயர்வு குறித்தும் எந்தப் பதிலும் இல்லை. காவலர்களின் அடிப்படைச் சம்பளம் ரூ.18 ஆயிரத்தில் இருந்து ரூ.27 ஆயிரமாக உயர்த்துவது உட்பட எனது எந்தவித கோரிக்கைக்கும் பதில் இல்லை.

தமிழகத்தில் பொருளாதாரக் குற்றங்கள் அதிகரித்துள்ளது. சீட்டு மோசடி அதிகரித்துள்ளது. அது எதிர்காலத்தில் நடக்கக் கூடாது என்று பேசினேன். அதற்கும் பதில் இல்லை.

இதையெல்லாம் விட்டுவிட்டு 45 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவத்தை எடுத்துப் பேசி அவையில் கலாட்டா நடைபெறுகிறது. இதைப் பேசிப் பேசி சோர்ந்துவிட்டோம். அப்படிப்பட்ட பேச்சுகளால் அவையின் நேரத்தை வீணடிக்கிறார்கள். சட்டப்பேரவையில் எங்கள் கேள்விகளுக்கு பதில் இல்லாமல், எப்போதும் ஆளுங்கட்சிக்கு - எதிர்க்கட்சிக்கு இடையேயான பிரச்சினையே நடக்கிறது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாநகர காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில், இயக்க சீரமைப்பு திட்டம்–2ன் கீழ் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்வு தொடர்பான நிகழ்வில், மேலிடப் பார்வையாளர் வழக்கறிஞர் தமிழ்ச்செல்வன் முன்னிலையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதில், மாநகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் ராஜேஷ் ராஜப்பா, முன்னாள் மாவட்ட தலைவர் நாகர்கோயில், மேலிடப் பார்வையாளர் திருச்செல்வம் ஆகியோர் முன்னிலையில், முன்னாள் எஸ்.சி. பிரிவு மாநில துணைத்தலைவர் குளம் எம். ராஜேந்திரன், மாநகர காங்கிரஸ் கமிட்டி மாவட்டத் துணைத்தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்கான விண்ணப்பத்தை மேலிடப் பார்வையாளர் வழக்கறிஞர் தமிழ்ச்செல்வனிடம் வழங்கினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கோபிசெட்டிபாளையம் மின் பகிர்மான வட்டத்தில் பணியாற்றும் உதவி செயற்பொறியாளர் கே.வி.ரகுநாதன் அவர்களுக்கு ஆகஸ்ட் 2026 மாதத்திற்கு மாதம் ஒரு மாமனிதருக்கான பாராட்டுச்சான்றிதழை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, (07.09.2026) அன்று வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உள்ளார்.

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் முகாம்

ஈரோடு மாவட்டம், ஈரோடு கோட்டம், ஈரோடு, பெருந்துறை, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி வட்டங்களுக்கு எதிர்வரும் 11.09.2026 (வெள்ளி கிழமை) அன்று காலை 11.00 மணிக்கு ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் "விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் முகாம்" நடைபெறவுள்ளது. மேற்படி முகாமில் விவசாயம் சார்ந்த கோரிக்கை மனுக்களுக்கு மட்டுமே தீர்வு காணும் பொருட்டு முகாம் நடைபெறவுள்ளது என்பதையும், மேற்படி முகாமில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கோவையில் மூத்த குடிமக்களின் ஓய்வு கால வாழ்க்கைக்கான ஒரு புதிய அத்யாயத்தை உருவாக்கியுள்ளது

## இன்பினியம் ஒன் லைப் எனும் மூத்த குடிமக்களுக்கான குடியிருப்புகளை அறிமுகம் செய்யபட உள்ளது




மூத்த குடி மக்களுக்கான ப்ரத்யேக குடியிருப்பான இன்பினியம் ஒன் லைப் எனும் குடியிருப்புகளை கோவை வேடபட்டி பகுதியில் அறிமுகம் செய்யபட உள்ளது. வரும் செப்டம்பர் 11, 12, மற்றும் 13 ஆகிய தேதிகளில் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த குடியிருப்புகள், மூத்த குடி மக்களுக்கான சுதந்திரமான வாழ்க்கை, மருத்துவ வசதி, மற்றும் நல்வாழ்வு, உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் ஒரே கூரையின் கீழ் கொண்டு செயல்பட உள்ளது. கோவையில் பிரீமியம் குடியிருப்புகளை உருவாக்குவதில் மக்களின் நன்மதிப்பையும், நம்பிக்கையும் பெற்றுள்ள இன்ஃபினியம் நிறுவனம், தற்பொழுது மூத்த குடி மக்களுக்கான பிரத்தியேக குடியிருப்புகளை, இன்ஃபினியம் ஒன் லைஃப் என்ற பெயரில் தொடங்கியுள்ளது. இது குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு இன்று நடைபெற்றது அப்பொழுது பேசிய இன்பினியம் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் செந்தில் குமார், மற்றும் இயக்குனர் கார்த்திகேயன், கூறியதாவது.. இன்ஃபினியம் ஒன் லைப் குடியிருப்பு கோவை வேடப்பட்டியில் அமைந்துள்ளது. முதியோர்களுக்கான ஓய்வு கால வாழ்வுக்கான, புதிய பரிணாமத்தை உருவாக்கும், எனவும் ஓய்வு காலத்தில் முதியவர்கள் மற்றவர்களை சார்ந்து இருக்கும் நிலை இல்லாமல், சுதந்திரம், தோழமை, பாதுகாப்பு, மற்றும் மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய ஒரு வாழ்க்கையாக மாற்றி அமைப்பதையே இந்த குடியிருப்புகள் காட்டுகிறது என்று தெரிவித்தனர். மேற்கு தொடர்ச்சி மலைகள், மற்றும் நொய்யல் ஆற்றுக்கு அருகில் அமைதியான இயற்கை சூழலில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு இரண்டு மற்றும் மூன்று படுக்கையறை கொண்ட இல்லங்களை இந்த குடியிருப்புகள் வழங்குகிறது. இங்கு குடியிருப்போர் தொடர்ந்து சுறுசுறுப்பாக இயங்கவும், தங்களது விருப்பங்களையும், ஆர்வங்களையும் தடையின்றி தொடரவும், புதிய நட்புறவுகளை உருவாக்கவும், இந்த சூழல் உருவாக்கித் தருகின்றது என்று தெரிவித்தனர். குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்கு, கோவையில் வெளியில், அல்லது வெளிநாடுகளில் வசிப்பவர்கள், தங்களது தாய் தந்தையரை பாதுகாப்புடன் வைத்து கொள்ள, ஒன் லைப் உண்மையான ஒரு உறவை வழங்குகின்றது. இரவு, பகல், என எந்த நேரத்திலும் பராமரிப்பும், ஆதரவும், உடனடியாக கிடைக்கும் என்பதை அறிந்திருப்பதால், தங்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு, மருத்துவ வசதி, அல்லது சமூக தொடர்பில் எந்த சமரசமும், இல்லாமல், சுயமாகவும், சுதந்திரமாகவும் வாழ இந்த ஒன் லைப் குடியிருப்புகள் புதிய தடம் பதிக்கும் என்று தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விநாயகர் சதுர்த்தி விழா 2026, மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் அமைப்பினர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, தலைமையில் (07.09.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர இருப்புக்கிடங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (08.09.2026) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் காலாண்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் முத்துசாமி, வட்டாட்சியர் (தேர்தல்) சண்முகசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.

# கோவை சர்க்காரியாவை பற்றி பேசுபவர்கள்,1991, 1996 ல் ஜெயலலிதா ஊழலை பற்றி ஏன் பேசுவதில்லை என புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கேள்வி எழுப்பினார்



கோவை குனிய முத்தூர் இல்லத்தில் புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் . கிருஷ்ணசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது

2026 சட்டமன்ற தேர்தலுக்கு பின் தவெக சந்தித்த முதல் சட்டமன்றத்தில், நிறைவாக காவல் துறை மானிய கோரிக்கையில் முதல்வரின் பதிலுரைக்காக நாள் ஒதுக்கப்பட்டது,

முதல்வர் என்ன பேசுகின்றார் என காத்துக்கொண்டு இருந்தோம் என தெரிவித்தார்.

4 மாதங்களில் சட்ட ஒழுங்கை பாதிக்கும் செயல்கள் நடந்து இருக்கின்றது, கொலை, கொள்ளை, போதையினால் ஏற்படும் பாதிப்புகள் நடந்துள்ளது எனவும்,

கொலைகளை தடுக்கவும், பெண்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான செயல்களுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க போகின்றோம் என்பதை முதல்வர் விளக்குவார் என எதிர்பார்த்தோம் எனவும்,

இன்றைய சட்டமன்றத்தில் முதல்வர் பதிலுரை எதிர்பார்த்த வகையில் இல்லை என தெரிவித்தார்.

திமுகவை முழு முதலாக தாக்குவதற்கு இந்த் சட்டமன்ற நிகழ்வை பயன்படுத்தி இருக்கின்றார் எனவும்,

ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்று கருத்தில்லை எனவும் ஆனால்

திமுக மட்டுமே ஊழல் செய்துள்ளதா ?,

91-96 ஆட்சியில் இருந்த ஜெயலலிதா மீது டான்ஸி வழக்கு, பிளசன்ட்டே வழக்கு,சொத்து

குவிப்பு வழக்கில் சிறை சென்றவர் என தெரிவித்தார். முதல்வர்

விஜய் ஊழலை மையமாக வைத்து இருக்கும் பட்சத்தில் நடுநிலையோடு செயல் படுபவராக இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

விஜய்

யாரை வைத்து ஆட்சி நடத்துகின்றார், ஸ்டாலினை முதல்வர் என சொல்லி வாக்குகளை வாங்கியவர்களை வைத்துக்கொண்டு,

விஜய் ஆர்.எஸ்.எஸ் பிள்ளை என முத்திரையிட்டவர்களக

வைத்து கொண்டு பேசுவது சரியாக தென்படவில்லை எனவும் தெரிவித்தார்.

அதிமுகவில் இருந்து வந்த சி.ஆர்.விஜய பாஸ்கர், எம். ஆர். விஜயபாஸ்கர் ஆகியோரை வைத்துக்கொண்டு விஜய் ஊழல் எதிர்ப்பு பேசுவது சரியாக தெரியவில்லை எனக்கூறிய அவர்,சட்டமன்ற நிகழ்வுகள்

சினிமா பாணியில் இருக்கின்றது , மரபு படி இல்லை என தெரிவித்தார்.

ஜெயலலிதாவின் புராணத்தை எத்தனை தடவை பாடுவீர்கள் ,

இதன் மூலமாக லாபம் பண்ண என்ன இருக்கு? என கேள்வி எழுப்பிய அவர்,தவெக ஆட்சியில் நடக்கும் சம்பவங்களுக்கு என்ன பதில் ?

அமலாக்கதுறைமாதிரியான மத்திய

ஏஜென்ஸி தாக்கல் செய்யும் ஆவணங்களை வைத்து குற்றவா ளி,நிரபராதி என்று முடிவு செய்ய முடியாது தமிழக அரசியல் தமிழக சட்டமன்றத்துடன் முடிந்து விடாது. சட்டமன்றத்திற்கு வெளியில்தான் மக்கள் சக்தி இருக்கின்றது. மக்கள் மன்றம் இருக்கின்றது.

சட்டமன்றத்தில் பேசுவதால் என்ற பலன் . வெறும் வாய்சவடால் எதற்கு?

யாராவதுதவறுசெய்து இருந்தால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கலாமே இந்த பேச்சு

ஆதரவாளர்களை குஷிபடுத்ததான் உதவும். ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுதானே. விஜயிடம் ஏதோ ஒரு பலகீனம் இருக்கின்றது.குற்றம் செய்தவர்களை தண்டிக்கும் எண்ணம் இருந்தால் நடவடிக்கைகள் எடுக்கலாம்.வேறு ஏதோ நோக்கம் இருக்கின்றது. ஊழல் ஒழிப்பு என்றால் திமுக மட்டும்தான் ஊழலா.?முதல்வரின் பேச்சு ஒரு தலைபட்ச பேச்சாகவும் செயல்படாகவும் இருக்கின்றது. ஜெயலலிதா சிறையில் இருந்தது தெரியதா ? ஊழல் ஒழிப்பா ? திமுக எதிர்ப்பு? எல்லா ஊழலையும் பேச வேண்டும் சர்க்காரியாவை பேசுபவர்கள்,91-96 ஜெயலலிதா ஊழலை ஏன் பேசுவதில்லை விஜய் முதல்வராகி விட்டதை உணர்ந்ததாக தெரியவில்லை

தேர்தல் கால ஆலோசகர்கள் மட்டுமே அவரிடம் நெருங்கி இருக்கின்றனர். பவர் சென்டர்கள் இருப்பது நாட்டுக்கு ஆபத்து.ஐ.ஜி x நேரடியாக முதல்வரிடம் தகவல்களை பகிர்ந்து கொள்ள முடிவதில்லை. வேறு நபர்கள் மூலம் தகவல் சொல்லி , அவர்கள்தான் எடிட் செய்து தகவல்களை முதல்வரிடம் கொண்டு செல்கின்றனர் விஜய்க்கு முதலமைச்சர் என்ற உணர்வு வராமல் தடுப்பது பவர் சென்டர்கள்தான் இது முதல்வரிடம் இருக்கும் பெரிய குறை சட்டமன்றத்தில் இன்று சரியாக செயல்படாமல் போனதற்கு இதுதான் காரணம் பவர் சென்டர் இல்லை என அவர் சொல்லலாம். ஆனால் அதுதான் உண்மை.

# தலைக்கவசம் அணிந்தால் மரக்கன்று அணியாவிட்டால் கொரில்லா அடி

## தூத்துக்குடி போக்குவரத்து போலீசாரின் நூதன விழிப்புணர்வு




தூத்துக்குடி மாநகரில் இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், போக்குவரத்து காவல்துறை சார்பில் நூதன விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

தூத்துக்குடி குரூஸ் பர்னாந்து சிலை சிக்னல் அருகே போக்குவரத்து ஆய்வாளர் சுனை முருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தலைக்கவசம் அணிந்து வந்த இருசக்கர வாகன ஓட்டிகளைப் பாராட்டி, அவர்களுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

அதே வேளையில், தலைக்கவசம் அணியாமல் வந்த வாகன ஓட்டிகளுக்கு கொரில்லா வேடமணிந்த நபர் மூலம் லேசாக அடி கொடுத்து ஹெல்மெட் அணியாமல் பயணிப்பதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து வித்தியாசமான முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், "ஹெல்மெட் அபராதத்தைத் தவிர்ப்பதற்காக அல்ல; உயிரைக் காப்பாற்றுவதற்காக" என்பதை வலியுறுத்தி வாகன ஓட்டிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் தமிழன்டா கலைக்குழு ஒருங்கிணைப்பாளர் ஜெகஜீவன், ஒலிபெருக்கி மூலம் தலைக்கவசம் அணிவதன் அவசியம் மற்றும் போக்குவரத்து விதிகளை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

போக்குவரத்து போலீசாரின் இந்த வித்தியாசமான விழிப்புணர்வு நடவடிக்கை, அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது.



# தூத்துக்குடி மக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகத்தில் கூடுதல் கவனம்

## 35 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை மேயர் ஜெகன் பெரியசாமி ஆய்வு

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளிலும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் சுழற்சி முறையில் நடைபெற்று வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, மாநகரப் பகுதிகளில் குடிநீர் விநியோகத்தை சீரமைக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதிபராசக்தி நகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மின்மோட்டார் சரிபார்க்கும் பணிகள் மற்றும் குடிநீர் விநியோகப் பதிவேடு ஆகியவற்றை ஜெகன் பெரியசாமி ஆய்வு செய்தார். தொடர்ந்து ஹவுசிங் போர்டு பகுதியில் நடைபெற்று வரும் புதிய குடிநீர் குழாய் இணைப்புப் பணிகளையும் நேரில் பார்வையிட்டார்.

அப்போது பேசிய ஜெகன் பெரியசாமி, மக்கள் நலத் திட்டங்கள் பாரபட்சமின்றி அனைத்து பகுதிகளுக்கும் சென்றடையும் வகையில் பணிகள் திட்டமிடப்பட்டு வருவதாக தெரிவித்தார். பணிகளில் தவறுகள் ஏற்படாத வகையில் ஒப்பந்ததாரர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மேலும், பொதுமக்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை கருத்தில் கொண்டு பணிகள் விரைவுபடுத்தப்பட்டு வருகின்றன. மாநகராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாடின்றி அனைவருக்கும் சீரான குடிநீர் கிடைக்கும் வகையில் 35 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் முழுமையாகக் கண்காணிக்கப்பட்டு, குடிநீர் விநியோகம் சீரமைக்கப்பட்டு வருகிறது என தெரிவித்தார்.

ஆய்வின்போது மாநகராட்சி பணிக்குழுத் தலைவர் கீதாமுருகேசன், முன்னாள் கவுன்சிலர் ரவீந்திரன், மாவட்ட மின்வாரிய தொழிற்சங்கத் தலைவர் பேச்சிமுத்து, சுற்றுச்சூழல் அணி பொன்ராஜ், போல்பேட்டை பகுதி பிரதிநிதிகள் பிரபாகர், ஜேஸ்பர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தூத்துக்குடியில் 41வது தேசிய கண்தான இருவார விழாவில் கண்தானம் செய்த குடும்பங்களுக்கு சான்றிதழ், கேடயம் வழங்கி கலெக்டர் விஷூ மகாஜன் பாராட்டு



தூத்துக்குடியில் 41-ஆவது தேசிய கண்தானம் இரு வார விழாவை முன்னிட்டு, கண்தானம் செய்த குடும்பத்தினரை மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் பாராட்டி கௌரவித்தார். தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும் 41-ஆவது தேசிய கண்தான இரு வார விழாவை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கில் கண் தானம் செய்த குடும்பத்தினரை மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் பொன்னாடை அணிவித்து, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடங்களை வழங்கி கௌரவித்தார். பின்னர் மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில், 41-ஆவது தேசிய கண்தான நிகழ்வில் பங்கேற்றதில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்நிகழ்வு முழுவதும் கண்தான செய்த குடும்ப உறுப்பினர்களுக்கு கௌரவிக்கப்படும் நிகழ்வாகும். பொதுவாக, வாழ்க்கையில் நம்மிடம் உள்ளவற்றை பிறருக்கு தானமாக வழங்குவதற்கு நாம் யோசிப்போம்.

குறிப்பாக இங்கு வந்திருக்கின்ற குடும்ப உறுப்பினர்கள் கண்களை தானமாக கொடுத்தவர்கள், அவர்களின் கடைசி நேரத்திலும் கூட உலகத்தில் என்ன கொடுக்க முடியும் என்ற சிந்தனை அவர்களிடம் இருந்துருக்கும். அதே நேரத்தில் ஒருவருக்கு கண்தானம் மூலம் பார்வை கிடைக்கும் சந்தோஷம் வாழ்வில், குழந்தை பிறக்கும் பொழுது தாய்க்கு அவரது குடும்பத்தினருக்கும் ஏற்படும் சந்தோஷத்தை போன்றது.

தமிழ்நாடு அரசு கண்தானம், உடல் உறுப்பு தானம் போன்றவைகள் குறித்து பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. அதேப்போல் மாவட்ட நிர்வாகமும், மருத்துவ கல்லூரி நிர்வாகமும் பல்வேறு விதமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. ஆகவே, அனைவரும் கண்தானம் செய்ய முன்வருவீர் என மாவட்ட ஆட்சியர் விஷூ மகாஜன் தெரிவித்தார்.

முன்னதாக, கண்தான உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் ஏற்றுக்கொள்ள அனைவரும் ஏற்றுக்கொண்டனர். பின்னர், கண்தானம் செய்த குடும்பத்தினர்களை மாவட்ட ஆட்சியர் பொன்னாடை அணிவித்து, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கி கௌரவித்தார். தொடர்ந்து, கண்தான விழிப்புணர்வு தொடர்பாக நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் எபனேசர் ஜோயல் குமார், துணை முதல்வர் கலைவாணி, மருத்துவ கண்காணிப்பாளர் பத்மநாபன், கண்ணியல் பிரிவு தலைவர் ரீட்டா ஹெப்சிராணி, மருத்துவர்கள், செவிலியர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் கண்தானம் செய்த குடும்பத்தினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஐவதுகுடி ஐயப்பா பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு அறிமுகப்பயிற்சி

கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகே ஐவதுகுடி ஐயப்பா பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான அறிமுகப் பயிற்சி வர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன் மேம்பாட் இணைப் பேராசிரியர் முனைவர் நீலகண்டன், பயிற்றுநர்கள் முனைவர் மணிகண்டன் சுந்தரேசன், விமல் கண்ணா, விக்னேஸ்வர், மோகன், ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினர்.




நிகழ்ச்சி-2026" தொடங்கியது. ஸ்ரீ ஐயப்பா கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர்கள் ராஜேந்திரன், சரவணன் ஆகியோர் தலைமை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் குருமணி வரவேற்றார்.

நிர்வாக அறங்காவலர்கள், ஆலோசகர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணடுக்காக கல்வி வழிகாட்டுதல், ஆளுமை மேம்பாடு, உளவியல், தொடர்புத்திறன், தலைமைப் பண்பு, நேர மேலாண்மை, தொழில் வழிகாட்டுதல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் ஆலோசனைகளும் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

திருச்சி நேஷனல் கல்லூரி தமிழ்த்துறை திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி இயற்பியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அசோக் குமார் ஆகியோர் மாணவர்களுக்கு வழிகாட்டினர்.

ஸ்ரீ ஐயப்பா கல்வி அறக்கட்டளை ஆலோசகர்கள் பாலகிருஷ்ணன், குமார், ஐயப்பா பொறியியல் கல்லூரி ஆலோசகர் முனைவர் புனிதவதி

முதலாம் ஆண்டு மாணவர்கள் கல்லூரி வாழ்க்கையை தன்னம்பிக்கையுடன் எதிர்கொண்டு, கல்வி மற்றும் தனித்திறன்களை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் நடைபெறும் இந்நிகழ்ச்சி, வருகிற 11-ந்தேதி வரை நடைபெறுகிறது.

# தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார் ஈரோடு தொழிலதிபர் ஆர்.நமச்சிவாயம்: ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுடன் விரைவில் மாபெரும் இணைப்பு விழா



ஈரோடு கருங்கல்பாளையத்தைச் சேர்ந்த ஆர்.நமச்சிவாயம் ஈரோடு அம்மன் டெக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரும், தொழிலதிபரும், சினிமா பட தயாரிப்பாளரும் ஆவார். தற்போது ஈரோடு மாநகராட்சி 39வது வார்டில் வசித்து வரும் இவர் ஈரோட்டில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் மாற்றத்தை நோக்கி பயணிக்கும் வகையில் தமிழக வெற்றி கழகத்தில் இணைய முடிவுசெய்தேன். அதன்படி தமிழக வெற்றி கழகத்தின் முக்கிய நிர்வாகிகளும், தமிழ்நாடு வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய பாலாஜி ஆகியோரின் முன்னிலையில் என்னை தமிழக வெற்றி கழகத்தில் இணைத்துக் கொண்டேன். இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த எனது ஆதரவாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்களை திரட்டி தமிழக வெற்றி கழகத்தில் இணைக்கும் மாபெரும் இணைப்பு விழா நிகழ்ச்சி விரைவில் ஈரோட்டில் மிகப்பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. இவ்விழாவில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் முக்கிய தலைவர்கள் ஒன்றாக பங்கேற்கவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் மிக தீவிரமாக நடைபெற்று வருகின்றன

என்று தொழிலதிபர் ஆர்.நமச்சிவாயம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இவரது இந்த திடீர் இணைப்பு ஈரோடு அரசியல் வட்டாரத்தில் பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளதாக பல்வேறு தரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

# தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள தொழுப்பேடு ஊராட்சியில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறை சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது இந்த முகாமை ஊராட்சி மன்ற தலைவர் பொன் சிவலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது ஊராட்சி மன்ற துணைத் தலைவர் புருஷோ த்தமன் முன்னிலையில் இந்த முகாமில் கால்நடைகளுக்கான சிகிச்சை கன்றுகள் மற்றும் ஆடுகளுக்கு குடற்புழு நீக்குதல், நோய்




தடுப்பு பணி தொற்று நோய்க்கு எதிரான தடுப்பூசி போடுதல், மலட்டுத்தன்மைக்கு சிறப்பு சிகிச்சை அளித்தால், சினை பரிசோதனை செய்தால், செயற்கை முறையில் கருவூட்டல் செய்தல் மற்றும் கால்நடைகளுக்கான பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்பட்டது இந்த சிகிச்சையினை அச்சிறுப்பாக்கம் கால்நடை உதவி மருத்துவர் கார்த்திக், நெற்குணம் கால்நடை உதவி மருத்துவர் அருணாச்சலம், கால்நடை ஆய்வாளர் ராமதாஸ், கால்நடை பராமரிப்பு உதவியாளர் சதீஷ் இவர்கள் கலந்து கொண்டு 300 மேற்பட்ட கால்நடைகளுக்கு தேவையான அனைத்து சிகிச்சைகளையும் வழங்கினர்

இந்த கால்நடை முகாமில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமான கால்நடைக்கு சிகிச்சை பெற்று சென்றனர் கால்நடைகளுக்கான மருந்துகள் மற்றும் கால்நடை உரிமையாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது

## ஈரோடு மாவட்டத்தில் ஷோபுகாய் சிட்டோரியோ கராத்தே பெல்ட் தேர்வு

## 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்பு



ஈரோடு மாவட்டம், பழையபாளையத்தில் அமைந்துள்ள எபிக் அகாடமியில் ஷோபுகாய் சிட்டோரியோ கராத்தே அமைப்பின் சார்பில் கலர் பெல்ட் தேர்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. உடலையும் மனதையும் ஒருமுகப்படுத்தும் தற்காப்புக்கலைகளில் ஒன்றான கராத்தேவில், மாணவர்களின் திறனையும் முன்னேற்றத்தையும் மதிப்பிடும் வகையில் இத்தேர்வு அமைந்தது. இதில் 50-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் கலந்து கொண்டு தங்களது தற்காப்புத் திறன்களை வெளிப்படுத்தினர். இத்தேர்வானது ஷோபுகாய்சிட்டோரியோ தலைவர் ஹன்சி அல்தாப் ஆலம் (TSKA செக்ரட்டரி) அவர்களின் வழிகாட்டலின்படி சிறப்பாக நடத்தப்பட்டது. மேலும், இந்நிகழ்வில் ஷோபுகாய் சேலஞ்சர்ஸ் கராத்தே கிளப் (EDSKA) செக்ரட்டரி ஷிகான் குமார், ஈரோடு மாவட்ட துணைத் தலைவர் ஷிகான் தனபால், சென்சாய் மகா முனியப்பன், சென்சாய் ஹரிராம் மற்றும் ஈரோடு மாவட்ட இணைச் செயலாளர் சென்சாய் லட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்து தேர்வை நெறிப்படுத்தினர். காலகட்டத்தில் கராத்தே போன்ற தற்காப்புக் கலைகள் வெறும் விளையாட்டு மட்டுமல்லாமல், மாணவர்களுக்கு சுய ஒழுக்கம், தன்னம்பிக்கை, மன ஒருமைப்பாடு மற்றும் உடனடி முடிவெடுக்கும் திறனை வளர்க்கும் முக்கிய காரணியாக விளங்குகின்றன. குறிப்பாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தற்காப்பு உணர்வையும் உடல் வலிமையையும் அளிப்பதில் இக்கலை பெரும் பங்கு வகிக்கிறது.இத்தேர்வில் திறம்படச் செயல்பட்டு தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பட்டங்கள் (பெல்ட்) மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. வெற்றி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் ஷோபுகாய் சிட்டோரியோ அமைப்பின் நிர்வாகிகள், பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுதலையும் தெரிவித்தனர்.

## லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை முகாம்

## 800க்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் சேர்க்கை



ஈரோடுமேற்குமாவட்டம் மற்றும் பவானி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் லட்சிய ஜனநாயக கட்சியின் சார்பில் தீவிர உறுப்பினர் சேர்க்கை முகாம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த உறுப்பினர்கள் சேர்க்கும் முகாமிற்கு ஈரோடு மேற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.வெற்றிநிதி சின்னையன் தலைமைதாங்கினார். மாவட்டத் துணைச் செயலாளர் பிரகாஷ் சின்னையன் முன்னிலை வகித்தார். ஈரோடு ஆர்.என். புதூர், பவானி பஸ் ஸ்டாண்ட், வீரப்பன்னாடியூர் , அம்பேத்கர் நகர் உள்ளிட்ட 9 முக்கிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பெண்கள் திரளாகக் கலந்து கொண்டு கட்சி உறுப்பினராகத் தங்களை இணைத்துக் கொண்டனர். இக்களப்பணியின்மூலம்800க்கும் மேற்பட்டோர் புதிதாகக் கட்சியில் இணைந்துள்ளனர். லட்சிய ஜனநாயக கட்சியின் மாவட்டப் பொருளாளர் வைதேகி, ஈரோடு மாநகரச் செயலாளர் செந்தில், விவசாய அணி மாவட்டத் துணைச் செயலாளர் விக்னேஷ் பண்ணாடி, மகளிர் அணி மாவட்டத் துணைச் செயலாளர் கௌசல்யா மற்றும் பவானி தொகுதி மாணவரணிச் செயலாளர் தம்பி நிதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்து முகாமிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். கட்சியின் மூத்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## தமிழக மீனவர்கள் 9 பேரின் காவல் 3வது முறையாக நீட்டிப்பு



ராமேசுவரம்: இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 9பேருக்கு செப்டம்பர் 22-ம் தேதி தேதி வரையிலும் மூன்றாவது முறையாக காவல் நீட்டிப்பு செய்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராமேசுவரம் மீன்பிடித்துறைமுகத்திலிருந்து ஆகஸ்ட் 12 அன்று கடலுக்குச் சென்ற வெலிங்டன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகை எல்லை தாண்டிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்.

படகிலிருந்த ஆரோக்கிய ஜனதன், அந்தோணி பிச்சை, டான்போஸ்கோ, பிரபு, ஆரோக்கிய டெவின், வேலுச்சாமி, சுப்பையா, ஆரோக்கிய ஜெனிஸ்டன், ஸ்டெவின் ஆகிய 9 மீனவர்கள் கைது செய்யப்பட்டு தலைமன்னார்கடற்படை முகாமிற்கு கொண்டு சென்று மன்னார் மீன்வளத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பின்னர் சிறைப்பிடிக்கப்பட்ட 9 மீனவர்கள் மீது, எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வவுனியாசிறையில் அடைக்கப்பட்டனர்.

மீனவர்களின் காவல் இன்றுநிறைவடைந்ததை தொடர்ந்து 9 மீனவர்களும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.வழக்கை நீதிபதி செப்டம்பர் 22-ம் தேதி வரையிலும் மூன்றாவதுமுறையாககாவல் நீட்டிப்பு செய்து உத்தரவிட்டார். தொடர்ந்து 9 மீனவர்கள் மீண்டும் வவுனியா சிறையில் மீண்டும் அடைக்கப்பட்டனர்.

## “மிசா கொடுமைகளை முதலமைச்சர் விஜய் அரை மணி நேரம் தாங்குவாரா?”

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச்செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேட்டி



விழுப்புரம்: "மிசா கொடுமைகளை அரை மணி நேரம் தாங்குவாரா?" என கேள்வி எழுப்பி, முதல்வர் விஜய்யின் பதிலுரைக்கு மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் செய்தியாளர்களிடம் இன்று அவர் பேசும்போது, "இந்திய வானவியல் ஆராய்ச்சி உட்பட பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு பயன்படும் இஸ்ரோ அமைப்பை தனியாருக்கு தாரை வார்க்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. ஊழியர்கள் எதிர்ப்பு தெரிவித்தபோது, இஸ்ரோவை தனியாருக்கு வழங்கவில்லை, ஏவப்படும் ராக்கெட்டுகளைதான் தனியார் வசம் கொடுக்க உள்ளோம் என்கிறார்கள். ராக்கெட் ஏவுவதை தனியாருக்கு வழங்கிவிட்டால், இஸ்ரோவின் பணி என்ன?

நாடாளுமன்ற கூட்டத்தில், ஒரு நாள் கூட மக்கள் பிரச்சினை மற்றும் எதிர்க்கட்சிகளின் கருத்தை கேட்டு, விவாதம் நடத்தி, பதில் சொல்லும் நிலையில் மத்திய அரசு இல்லை. 25 நாட்கள் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தில் ஒரு நாள் கூட பிரதமர் மோடி மற்றும் உள்துறை அமைச்சர் வரவில்லை.

காய்கறி, மளிகை பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. ஒரு கிலோ அரிசி ரூ.35 கூடியிருக்கிறது.இதுதொடர்பாக மத்திய, மாநில அரசுகள் என்ன செய்கிறது என்று தெரியவில்லை. பதுக்கல் இருப்பதால் விலை உயர்ந்து வருவதாக வணிகர்கள் கூறுகின்றனர். பதுக்கலை ஏன் தடுக்கவில்லை. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவேண்டும், மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை இல்லாமல் மத்திய, மாநில அரசுகள் உள்ளன.

தமிழக சட்டப்பேரவையில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஆழமாக பேசவில்லை. கஷ்டப்பட்டு விவசாயி விளைவிக்கும் நெல்லை கொள்முதல் செய்யாததால்,மழையில்நனைந்து வீணாகிறது. கொள்முதல் செய்த நெல்லை கூட பாதுகாக்க முடியாத நிலையில் தமிழக அரசு உள்ளது.

மேம்போக்காக பேசினாலும், மக்கள் கேட்பார்கள் என மற்ற ஆட்சியை போன்று தவெக ஆட்சியும் இருக்கிறது. இது தொடர்பாக பேச, சட்டபேரவையில் வழி இல்லை. தனிப்பட்ட விரோதங்களை தீர்த்துக் கொள்வது போல பேசுகிறார்கள்.

உடல்மொழியில் நியாயமில்லை:

காவல் துறை மானிய கோரிக்கை மீது முதல்வர் விஜய் பதில் சொல்கிறார். எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் விமர்சனங்களுக்கு முதல்வர் நிதானமாக பதில் சொல்ல வேண்டும். கொலையை எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டதான் செய்வார்கள்.

அதனால் அவர்கள் மீது பரஸ்பர பழியும், குற்றத்தையும் சுமத்துவது சரியா? இது என்ன பட்டிமன்றமா?

முதல்வர் விஜயின் உடல் மொழி நியாயமில்லை. 8 கோடி மக்களின் முதன்மை பிரதிநிதியாக உள்ள முதல்வர் விஜய்யே இப்படி பேசினால், அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்கள் எப்படி பேசவார்கள்? உடல்மொழி கூட பொருத்தமாக அமையவில்லை என்பது வருத்தம்.

## நெல்லை பள்ளி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கில் முக்கிய குற்றவாளிக்கு தூக்கு தண்டனை



திருநெல்வேலி: பள்ளி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் முக்கியக் குற்றவாளிக்கு தூக்கு தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்து ள்ளது.

திருநெல்வேலியில் கடந்த 2022-ம் ஆண்டு பிளஸ் டூ மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் முனீஸ்வரர், சின்ன குட்டி, முருகேசன் ஆகிய மூன்று பேர் குற்றவாளிகள் என நெல்லை மாவட்ட போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு அறிவித்தது.

தூக்குதண்டனை: குற்றவாளி சின்ன குட்டிக்கு தூக்குத் தண்டனையும், முருகேசனுக்கு 20 வருட கடுங்காவல் தண்டனையும், முனீஸ்வரனுக்கு 13 வருட கடுங்காவல் தண்டனையும் விதித்து நெல்லை போக்சோ நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார் உத்தரவிட்டுள்ளார்.

## 'Between entities concerned': MEA reacts to BAPSEiffel Tower row



MEA official Spokesperson Randhir Jaiswal said India was "aware of the opening of a temple by the BAPS Sanstha in the Paris area." The ministry of external affairs on Tuesday responded to reports that women employees at the Eiffel Tower were asked to avoid certain areas during the BAPS delegation's visit, saying it was a matter was "between the entities concerned." MEA official Spokesperson Randhir Jaiswal said India was "aware of the opening of a temple by the BAPS Sanstha in the Paris area." This came a day after the Eiffel Tower shut down following staff allegations that female workers were asked to leave due to the BAPS group visit.

The tower reopened on Tuesday. MEA spokesperson Randhir Jaiswal said, "We are aware of the opening of a temple by the BAPS Sanstha in the Paris area. As to the particular issue pertaining to the Tower, this is a matter purely between the entities concerned."

On a reporter's query regarding Prime Minister Narendra Modi speaking at the inauguration of the BAPS temple, Jaiswal said it was a "common practice" for the PM to do so. "It is a common practice for the Prime Minister to convey his good wishes on such occasions. In this case, it was done virtually. There is no cause for any comment in this regard," the MEA spokesperson added.

## ஆன்லைன் முதலீடு மோசடி; மேலூர் தம்பதி கைது



மதுரை: ஆன்லைன் முதலீடு மோசடி விவகாரத்தில் முக்கிய மூளையாகச்செயல்பட்ட மேலூர் தம்பதியை பொருளாதார குற்றத் தடுப்பு போலீஸார் கைது செய்தனர்.இணைய வழியில் (எப்க்யூஎல், வி.ஜி.) எனும் இரு செயலிகள் மூலம் கிரிப்டோ கரன்சி வர்த்தகம் எனும் பெயரில் 45 நாட்களில் முதலீட்டுத் தொகை இரட்டிப்பாக வழங்கப்படும் என ஆசையைத் தூண்டி ஆயிரக்கணக்கான மக்களிடம் முதலீடுகளை பெற்று கோடிக்கணக்கில் மோசடி நடந்தது.

இதில், மேலூர் அருகிலுள்ள கட்டயம்பட்டியைச் சேர்ந்த ரஞ்சித், அவரது தம்பி அருண் ஆகியோர் முகவர்களை நியமித்து இந்த மெகா மோசடியை அரங்கேற்றியது விசாரணையில் தெரிய வந்தது. இந்த மோசடியில் பாதிக்கப்பட்ட மதுரை, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை உள்ளிட்ட தென் மாவட்டங்களைச் சேர்ந்த 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புகார் கொடுத்துள்ளனர். மேலூர் பகுதியில் மட்டும் 35 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மோசடியில் இதுவரை ரஞ்சித்தின் உறவினர்கள், முகவர்கள் என 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இவ்வழக்கில் முக்கிய மூளையாகச் செயல்பட்ட ரஞ்சித், அவரது மனைவி பிரியதர்ஷினி ஆகியோர் நேற்று மாலை திண்டுக்கல் நீதிமன்றத்தில் சரணடைய திட்டமிட்டு இருந்தது தெரிய வந்தது.

அங்கு சென்ற மதுரை பொருளாதார குற்றப்பிரிவு போலீஸார் அவர்களை கைது செய்து மதுரை அழைத்து வந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.